DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC.NO. 39/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W. 2<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜ்குமார் | தொழில் | : | கிளை மேலாளர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கந்தசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.10.2022

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வெள்ளகோவில், ஆக்ஸிஸ் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணை வந்ததன் பேரில், நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலை எங்கள் வங்கி உடையது தான் ஆகும். ம.சா.ஆ.1 காசோலை துரைசாமி என்பவரின் சேமிப்பு கணக்கு எண்.915010017612247 என்ற கணக்கிற்கு வழங்கப்பட்டதாகும்.

2. மேற்சொன்ன சேமிப்பு கணக்கின் கணக்கு துவக்க விண்ணப்பம் கொண்டு வந்திருக்கிறேன். மேற்சொன்ன சேமிப்பு கணக்கின் கடந்த 01.04.2015 முதல் 28.03.2019 தேதி வரையிலான கணக்கு பட்டியலின் கணினி நகல் கொண்டு வந்திருக்கிறேன். காசோலை எண். 34240 ஆனது

STC. No. 39/2018, நாள். 13.10.2022. P.W.2. விசாரணை தொடர்ச்சி

வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு, வாடிக்கையாளரின் கையொப்பம் மாறுபட்டுள்ளதாக திருப்பப்பட்டுள்ளது. கடந்த 28.03.2018 ம் தேதியில் மேற்சொன்ன சேமிப்பு கணக்கில் தொகை எதுவும் பாக்கியில்லை.

3. காசோலையை Stop Payment செய்வது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் வங்கியில் கொடுக்கப்படவில்லை. காசோலைகள் எதுவும் வங்கிக்கு திரும்ப ஒப்படைக்கப்படவில்லை. மேற்சொன்ன சேமிப்பு கணக்கு கடந்த 29.03.2019 ம் தேதியன்று முடிக்கப்பட்டுள்ளது. **சேமிப்பு கணக்கு எண். 915010017612247 கணக்கு துவக்க விண்ணப்பத்தின் கணினி நகல் ம.சா.ஆ.7. கடந்த 01.04.2015 முதல் 28.03.2019 தேதி வரையிலான வங்கி கணக்கு பட்டியலின் கணினி நகல் ம.சா.ஆ.8.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 28.03.2018 ம் தேதியன்று, காசோலையை சரவணகுகன் என்பவர் வசூலுக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். காசோலை வசூலுக்கு தாக்கல் செய்த மறுநாள் எங்கள் பரிசீலனைக்கு வரும். காசோலையில் உள்ள கையெழுத்து மாறுபட்டுள்ளதாக தான் எங்கள் வங்கியால் திருப்பப்பட்டுள்ளது. துரைசாமி என்பவரின் வங்கி கணக்கு கடந்த 29.03.2019 வரையில் இருந்திருக்கிறது.

2. மேற்சொன்ன வங்கி கணக்கில், கணக்கு பட்டியலின்படி அதிகபட்சம் ரூ.10,00,000/- வரை பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. வாடிக்கையாளரின் வேண்டுகோளின்படி, கணக்கு முடிக்கப்பட்டுள்ளது.

ஒம்/-த.பிரவின்குமார்
குற்றவியல் நடுவர்,
காங்கேயம்.